

## மரம் விழுந்ததால் மூடப்பட்ட சுல்தான் இஸ்மாயில் சாலை

# வழக்க நிலைக்குத் திரும்பியது

கோலாலம்பூர், மே 9 -

சுல்தான் இஸ்மாயில் சாலை நேற்று மாலையில் மீண்டும் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பலத்த காற்றுடன் பெய்த கன மழையின்போது, அச்சாலை ஓரத்தில் இருந்த ஒரு பெரிய மரம் வேரோடு சாலையில் விழுந்ததைத் தொடர்ந்து அனைத்து போக்குவரத்துக்கும் அது உடனடியாக மூடப்பட்டது. அதில் மொத்தம் 17 வாகனங்கள் கடுமையாகச் சேதமுற்றன. அவற்றில் ஒரு காரை ஓட்டி வந்த 47 வயதுடைய ஆடவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அக்காரில் இருந்த, சுவீடன் நாட்டுப் பெண்ணும் 26 வயதுடைய மலேசியரும் பலத்த காயங்களுக்கு ஆளாகினர். சாலையை மூடியிருந்த மரக் கிளைகளை அகற்றும் மற்றும் சாலையை சுத்தப்படுத்தும் பணி நேற்று பிற்பகல் வாக்கில் முழுமையாக நிறைவடைந்ததாக, கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகம் (டிபிகேஎல்) தெரிவித்தது.

வேரோடு சரிந்து விழுந்த மரத்தின் வயது 50 ஆண்டுகளுக்கும் மேலானது என்றும் அம்மரம் தனியார் தரப்பின் கண்காணிப்பின் கீழ் இருந்து வந்தது என்றும், பிரதமர் இலாகா அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா தெரிவித்தார்.

“கோலாலம்பூர் சுற்றுப் பகுதிகளில் 50 முதல் 80 ஆண்டுகள் வயதுடைய பல மரங்கள் இருப்பதை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். நிலையற்ற வானிலைக் காரணமாக விழக் கூடிய நிலையிலும் அவை இருக்கின்றன” என்று அவர் கூறினார்.

இதனிடையே, சம்பந்தப்பட்ட இடத்திலுள்ள மோனோரெயில் தடமும், நேற்று மாலை 5 மணிக்கு மீண்டும் திறக்கப்பட்டது.

மோனோரெயில் தடம் மீது விழுந்துக் கிடந்த மரக் கிளைகளையும் இலைகளையும் அகற்றி சுத்தப்படுத்தும் பணி நேற்று அதிகாலை 5.55 மணிக்கு முடிவுற்றதாக, அறிக்கை ஒன்றின் வழி ரெப்பிட் ரெயில் நிறுவனம் தெரிவித்தது.